### 7. செவிபுல கற்புல ஊடகம்

உங்களது தனிப்பட்ட புகைப்படம், காணொளி, குரல் பதிவு எதையும் மின்னஞ்சலிலோ அல்லது மற்றவர்கள் அடையக்கூடிய தளங்களிலோ பதிவிட வேண்டாம். அவற்றை திருடி உங்களிற்கு ஆபத்தும் பாதகமான விளைவுகளையும் ஏற்படுத்தும் வகையில் மாற்றி யமைத்து பயன்படுத்தலாம். மேலும் அவற்றை கொண்டு உங்களை அச்சமூட்டி கப்பம் கேட்டு மிரட்டலாம்.



### 8. போலியான தகவல்கள்

பொய்யான மற்றும் பாதகமான தகவல்களை புகைப்படம், காணொளி, கடிதம், குரல் பதிவு போன்ற எந்த வடிவத்திலோ எந்த மொழியிலோ சமூக ஊடகத்தில் வெளியிடுவது குற்றமாகும். அவற்றை தயாரித்தல், களஞ்சியப் படுத்தல், விற்பனை செய்தல், பரிமாறுதல் போன்றவை தண்டனைக்குறிய குற்றமாகும்.

### 9. ஊடகத்தை சரியாக உபயோகித்தல்

இனந்தெரியாத தொலைபேசி அழைப்பு, குறுந்தகவல் மற்றும் மின்னஞ்சல் ஊடாக உங்களிற்கு உதவி செய்தல், இலவசமாக ஏதாவது ஒன்றை பெற்றுக் கொடுத்தல், உங்களது வங்கி கணக்கில் வைப்பிடுதல், நீங்கள் பரிசு பெற்றவர் என்று அறிவித்தல், வீட்டில் இருந்தே கணனி மூலம் பணம் சம்பாதிக்கலாம் போன்ற அறிவித்தல்களை நீங்கள் காணலாம். இவை அனைத்தும் போலியானவை களே. இவற்றை நம்பி எந்த சந்தர்ப்பத்திலும் உங்களது தனிப்பட்ட தகவல்களை எவரோடும் பகிராதீர்கள்.

இணையத்தள பாவனை பற்றி நன்றாக தெளிவைப்பெற்று உங்கள் தேவைக்கு ஏற்ப சரியாக பயன்படுத்துங்கள்.

### 10. இணைய பாவனையில் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்க விதிகள்

- போலி மின்னஞ்சல் கணக்கு மற்றும் சமூக வலைத்தளங்கள் உருவாக்குவதை தவிர்க்கவும்.
- உரியவருக்கு தெரியாமல் அவர்களின் தகவல்களை இணையத்தளத்தில் பதிவிடாதீர்கள்.
- இணையத்தளத்தினுள் தனிப்பட்ட நபரின் அந்தரங்க தகவல்களை பயன்படுத்தாதீர்கள்.
- தனிநபரை, நிறுவனத்தை, மதத்தை மற்றும் அரசியல் கட்சியை இழிவு படுத்தும் விதத்தில் இணையத்தை பயன்படுத்தாதீர்கள்.
- ஒரு நபரின் புகைப்படத்தில் மாற்றம் செய்தல், அல்லது இணைத்தல் மற்றும் அவ்வாறானவற்றை சமூக ஊடகங்களில் அல்லது இணையத்தளங்களில் பதிவிடுதல் குற்றமாகும்.

### 11. குற்றங்களை அறிவித்தல்

மேற்கூறப்பட்ட எந்தவொரு செயலும் சட்டப்படி குற்ற மாகும். அவ்வாறான சம்பவங்கள் ஏதாவது உங் களுக்கோ அல்லது வேறு நபர்களுக்கோ நடந்தால் கீழ்காணும் நிறுவனங்களுக்கு அறிவியுங்கள்.

| | | |
|---|---|---|
| 1. | இணைய குற்றவியல் விசாரணை திணைக்களம் | : 011 269 1982 |
| 2. | தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை | : 1929 |
| 3. | SLCERT | : 011 269 1692<br>: slcert@slcert.gov.lk |
| 4. | பீஸ் அமைப்பு | : 011 281 9397 / 071 273 3037<br>report@ecpatsrilanka.org |

**பீஸ் அமைப்பு (PEaCE)**


**எங்குமுள்ள சிறுவர்களையும் சூழலையும் பாதுகாக்கும் அமைப்பு**

(PEaCE / ECPAT Sri Lanka)

இல 165/2 துட்டுகெமுனு வீதி, கொஹுவல.

| | |
|---|---|
| தொலைபேசி | : 011 281 9397 |
| கையடக்கத் தொலைபேசி | : 070 550 7121 |
| தொலைநகல் | : 011 276 8862 |
| இணையத்தளம் | : www.ecpatsrilanka.com |
| முகநூல் | : ECPAT Sri Lanka |
| டுவிட்டர் | : ECPAT Sri Lanka |


# கையடக்க தொலைபேசி மற்றும் இணையத்தை பாவிக்கும்போது பெற்றோர் மற்றும் பிள்ளைகள் கடைப்பிடிக்க வேண்டியவை

காலத்தின் தேவைகளுக்கு ஏற்ப பீஸ் அமைப்பினால் தயாரிக்கப்பட்ட வெளியீடு




எங்குமுள்ள சிறுவர்களையும் சூழலையும் பாதுகாக்கும் அமைப்பு

(PEaCE / ECPAT Sri Lanka)



### 1. பாவனை

கையடக்க தொலைபேசி மற்றும் இணையத்தளங்களை சாதகமாக பாவிக்க கூடிய பல வழிகள் உண்டு. அது உலக அறிவை உங்கள் காலடிக்கு கொண்டு வந்து தரும். ஊசி தயாரிப்பு தொடக்கம் உலக இரகசியத்தை தேடிச் செல்லும் விண்வெளி விமானம் வரை பரவலான அறிவை தரும். அது அனைவரின் வாழ்வையும் இலகு படுத்தும். ஆனால் அதை மிகவும் கவனத்துடன் கையாளுதல் அவசியமாகும்.



### 2. தீய பயன்பாடு

கையடக்க தொலைபேசி மற்றும் இணையத்தளங்களை தேவையற்ற முறையில் பாவிக்கும் பலர் உள்ளனர். பொய், ஏமாற்று, தற்கொலை போன்ற சமூக விரோத செயற்பாடுகளுக்கு தூண்டுதல் மற்றும் பலவகையிலான குற்றங்களை திட்டமிட்டு அமுல்படுத்தும் கருவியாக வும் இவற்றை பயன்படுத்துகின்றனர். ஆகவே இதைப் பற்றி நீங்கள் தெளிவாக அறிந்து கொள்ள வேண்டும்.



### 3. தொலைபேசியில் தகவல்களை சேமித்தல்

உங்களது மின்னஞ்சல் முகவரி தொலைபேசியில் பதிவு செய்யப்பட்டிருந்தால் உங்களுக்கு தெரியாமலேயே உங்களது தொலைபேசியில் உள்ள தகவல்கள் இணையத் தளத்தில் கலந்துவிடும். இதன் மூலம் உங்களது தொலை பேசியில் தனிப்பட்ட தகவல்கள், இரகசிய புகைப் படங்கள், காணொளிகள், மற்றும் குறியீடுகள் (Password) மற்றவர்களால் திருடப்படலாம். அவ்வாறானவற்றை தொலைபேசியில் சேமிக்காதீர்கள்.



### 4. ஏமாற்றுதல்

இணையத்தளம் மூலம் யாரும் உங்களை ஏமாற்று வதற்கு முயற்சிக்கலாம்; இது மிகவும் மெதுவாக, படிப் படியாக நடைபெறும். அவ்வாறு நடந்தால் நீங்கள் பல அசௌகரியங்களுக்கு முகம் கொடுக்க நேரிடும். உங்களிடமுள்ள தனிப்பட்ட தகவல்கள், புகைப் படங்கள், காணொளிகள், மற்றும் இரகசிய சொற்கள் போன்றவற்றை எவரிடமும் பகிராதீர்கள். இணையத் தளத்தில் பதிவிடாதீர்கள்.



### 5. சமூக வலைத்தளங்கள்

சமூக வலைத்தள கணக்குகளால் உங்களுக்கு தெரிந்த அல்லது தெரியாத எவராலும் தொடர்பு கொள்ள முடியும். அவர்கள் பரிமாறும் தகவல்களிடையே உண்மையான, நன்மையான மட்டுமல்லாமல் தீமையான, பொய்யான மற்றும் ஆபாசமானவைகளும் இருக்கலாம். இவை உங்களுக்கு பாதகமான விளைவுகளையே ஏற்படுத்தும்.



### 6. அறிமுகமற்ற ந(ண்)பர்கள்

சமூக வலைத்தளங்களின் ஊடாக தொடர்புகொள்ளும் நபர்களிடம் கவனமாக இருங்கள். அவ்வாறு தொடர்பு கொண்டவர்கள் நீண்ட நாள் நண்பராக இருந்தாலும் அவர்களுக்கு தவறான உள்நோக்கமும் இருக்கலாம். இவ்வாறானவர்களை இனங்காண்பது மிகவும் கடின மானது. ஆகவே தனிப்பட்ட தகவல்களை யாரிடமும் வழங்காதீர்கள். அவர்கள் யாராயினும் கீழ்த்தரமான நோக்கத்திற்காகவும் பணத்திற்காகவும் அவற்றை விற்பனை செய்யக் கூடும்.